1982 மார்ச் 3]

(ஆ) கிருட்டிணகிரி அரசு கலைக் கல்லூரி மூடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. இரா. சின்னராசு அவர்கள்,

''கிருட்டிணகிரியிலுள்ள அரசு கலைக் கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டுள்ளது குறித்து.'

ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர்கள் இருக்கையில் இல்லாததால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான அறிக்கையை அவைமுன் வைக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

கடந்த 9—2—1982 முதல் அரசினர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி காலவரையின்றி மூடப்பட்டன. இதற்கான அடிப்படைக் காரணங்கள்—

1. கடந்த சில மாதங்களில் குறிப்பிட்ட சில கல்லூரி மாணவர்கள் மாணவியரைத் தகாத வார்த்தைகளால் கேலிசெய்து கொண்டு வந்திருக்கிறார்கள். முதல்வரும் ஆசிரியர்களும் அவ்வப்பொழுது அந்தந்த மாணவர்களுக்கு அறிவுரையும் கண்டனமும் தெரிவித்து வந்திருக்கிறார்கள். 29—1—1982, அன்று மூன்று மாணவிகள் ஒரு மாணவர் செய்த தரக்குறைவான செயல் குறித்து முதல்வருக்கு எழுத்து மூலம் மனுக் கொடுத்தனர். அவர்களின் பெற்றோரும் முதல்வரிடம் முறையிட்டனர். அதன் பேரில் அம்மாணவர் அவரது பெற்றோருடன் முதல்வரை 8—2—1983ம் தேதி சந்தித்தார். அம்மாணவரின் சூழ்நிலையின், காரணமாகவும் கல்லூரிக் கல்வியினை முடிப்பதற்கு இன்னும் இருமாதங்களே இருப்பதாலும், அம்மாணவரின் எதிர்காலம் பாதிக்கப்பட வேண்டாம் என்ற நல்லநோக்கத்துடன் அம்மாணவரை கல்லூரியிலிருந்து தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ இன்றுவரை நீக்கப் படாமல் ஆனால் கல்லூரியில் தகாத நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறாமல் இருக்கும்பொருட்டு அவர் கல்லூரிக்கு வரவேண்டாமென அறிவுட்டுத்தப் படடுள்ளார். அம்மாணவரும், அன்று பெற்றோரும் இதற்கு உடன்பட்டனர்.

2. 9—2—1982 செவ்வாய்க்கிழமை காலை, வழக்கம்போல் கல்லூரி துவங்கி அமைதியாக நடைபெற்றுக் கொண்டு இருந்தது காலை 10-30 மணி அளவில் கல்லூரி ஒன்னிறிய மாலை மாணவ

திசெ அரங்கநாயகம் [1982 மார்ச் 3

பேரவைத் தலைவரும் அவரது நண்பர்களும் எல்லா வகுப்புகளுக்கும் சென்று மாணவர்களைக் கட்டயமாக திடீரென வெளியேற்றினர். முதல்வருக்கோ, அல்லது எந்தப்பேராசிரியருக்குமோ முன்னறிவிப்பு ஏதும் தராமல் இக்காரியத்தை செய்தனர். மாணவர்கள் கூட்டமாகக் கல்லூரியை விட்டுவெளியேறிக் கல்லூரிக்கு வெளியே ஏதோ திட்டங்கள் தீட்டி வந்தனர். மேலும் என்ன காரணத்திற்காக இம்மாதிரி தகாத நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும் முதல்வருக்கோ, மற்றவர்கட்கோ, அறிவிக்கப்படவில்லை. ஆகவே, கல்லூரியில் அசம்பாவித நிகழ்சிகள் நடை பறக் கூடுமென எதிர்பார்த்து கல்லூரி காலவரையின்றி மூடப்பபட்டது.

3. 10.2,82 புதன் கிழமை காலை 10-30 மணிக்கு மாணவர் பலருடன் மாணவர் பேரவைத் தலைவர் முதல்வர் அறைக்குள் திடீரென புகுந்து மேலே பத்தி 1.ல் குறிப்பிட்ட மாணவரை ஏன் நீக்கினீர்கள் எனக் கூச்சலிட்டார். நடந்தவற்றை அமைதியாகக் அறியும் மாணவர் ஆவைத்தலைவர் முதல்வரை தரக் கூறைவான வாரத்தைகளால் ஏ.சி. முதல்வர் மீது கல் எறிதல் போன்ற வன்முறைகளில் ஈடுபட்டனர். மாணவர்களின் நோக்கம் என்ன? என்ன குறைபாடுகள் உள்ளன? அவர்களது நியாயமான எதிர்பார்ப்புகள்என்ன என்பதை எழுத்து வடிவில் முதல்வரிடம் இது நாள் வரை தெரியப்படுத்தவில்லை மாணவர் தலைவர்கள் மட்டும் தனியாக வந்து பிரச்சினைகளைப் பேச முன்வரவில்லை. மாறாகக் கும்பலுடன் கல்லூரிக்குள் புகுந்து, சன்னல் கதவுகள், அறிவிப்புப் பலகைபின் கல்லூரிகளில் புகுந்து, சன்னல் கதவுகள், அறிவிப்புப் பலகைகள் போன்றவற்றை உடைத்தார்கள். முதல்வர் அறையில் கதவுகளையும் உடைத்தார்கள். 9—2—1982 அன்று மாலை எத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடும் என்ற அய்யப் பாட்டில் கல்லூரி மூடப்பட்டதோ, அவை 10—2—1982ல் நீடிதத்தது நிகழ்ந்து, அய்யப்பாட்டினை உறுதிப்படுத்தின. இந்த அசம்பாவித நிகழ்ச்சிக்குப் பிறகு காவல்துறையின் துணை நாடபட்டு கல்லூரிக் கட்டடங்கள் பாதுகாப்பிற்காக அவர்கடளிம் ஒப்படைகப்பட்டுள்ளன

4. கல்லூரியில் எல்லா நிகழ்ச்சிகளும் மாணவர் தலைவர் கூறுகின்றபடிதான் நடைபெறவேண்டும் என்றும், மாணவத் தலைவரைக் கேட்காமல் தவறு செய்யும் மாணவர்களைத் தண்டிக்கவோ, விசாரிக்கவோ கூடக் கூடாது என்றும், மாணவத் தலைவரும் அவரது சகாக்களும் கூச்சலிடுகின்றன. இத்தகைய நிலையில் கல்லூரித் தலைவரும், மற்ற ஆசிரியர்களும் தங்கள் பணியினைச் செய்ய முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

1982 மார்ச் 3] தி செ அரங்கநாயகம்

(5) இம்மாதிரியான பிரச்சினைக்குரிய சில மாணவர்கள் கல்லூரியில் தொடர்ந்து நீடித்தால் கல்லூரிப் பணிகள் சுமுகமாக நடைபெற முடியாது. பல்கலைக்கழக விதிகளின் படி தேவையான அளவு கல்லூரி வேலைநாட்கள் இல்லாது போய் விட்டால், எல்லா மாணவ, மாணவியரும் இறுதித்தேர்வு எழுததத் தகுதி இழப்பார்கள். இக்கல்லூரியில் பயிலும் பெரும்பான்மையான மாணவர்கள் ஒழுங்காகப்படிக்க விரும்பு கின்றனர். கடந்த ஆண்டுகளில் இக்கல்லூரிகளில் ஆண்டு இறுதித் தேர்வு முடிவுகளைக் கவனிக்கும்பொழுது, மாநிலத்திலே கல்வித்தரத்தில் முதன்மை நிலையில் உள்ள கல்லூரிகளில் இக் கல்லூரியும் ஒன்று எனத்தெரியும். கடந்த மூன்றாண்டு காலமாக ஒழுக்கத்தைப் பேணும் நல்லதொரு கல்லூரி எனப் புகழப்பட்ட கல்லூரியாகும் இது. ஒழுக்கத்திலும், கல்வித்தரத்திலும் அது என்றும் முதன்மைக் கல்லூரியாக இருக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்காது.

6. 15—2—1982 அன்று பெற்றோர் மற்றும் நகரப்பிரமுகர்கள் கல்லூரி முதல்வரைச் சந்தித்து கல்லூரித் திறப்பதற்கு வேண்டிய வழிமுறைகளைப் பற்றி பேசினர். அக்கூட்டத்தில் மாணவர் களைத் தூண்டிவிட்ட குறிப்பிட்ட 5 மாணவர்கள் எழுத்துமூலம ாக மன்னிப்பு கோரவேண்டுமெனவும், வருங்காலத்தில் நல்வழியில் நடப்பதாக உறுதிதர வேண்டும் எனவும் இவ்வருடம் மீதமுள்ள கல்லூரி நாட்களில் எந்தவிதமான மாணவர் மன்றங்கள் துணை மன்றங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் இருக்கக்கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

7. அதன்படி மாணவர் மன்றத்தலைவரும், மற்ற முக்கிய மானவர்களும் எந்தவித நிபந்தனையுமின்றி மன்னிப்புக்கோரிய தால கல்லூரி 22—2—1982 முதல் தொடங்கப்பட்டு தற் பொழுது அமைதியாக நடந்துவருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

7. வரவு செலவுத் திட்டம்.

1982–83—பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. சி. த. சிதம்பரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982–83ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பட்ஜெட்டைப் பற்றி பேச வேண்டிய ஆளுங் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பாத யாத்திரையைப் பற்றிப் பேசினார்கள். ஆகவே, பட்ஜெட்டில் ஒன்றுமில்லை என்பதை தெளிவாக எடுத்துக் காட்டினார்கள் என்பதை நான்